Volume 3 Issue 2 February 2022 E-ISSN: 2582-2063

# சு.தமிழ்செல்வி அளம் நாவலில் மகளிர் அவலம் - ஒரு பார்வை

**த. ஞானசக்தி, எம்.ஏ, எம்.எட்.,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி*

**ஆய்வுச்சுருக்கம்**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நாவல் சிறந்ததொரு இடத்தைப் பெறுகிறது. இன்றைய சமூகச் சிந்தனையாளர்கள் தம் எண்ணங்களையும், சிந்தனைகளையும் வெளியிடுவதற்கு ஏற்ற சாதனமாக நாவல் உள்ளது. அதனால் இலக்கியமானது வளர்ந்து கிளைத்து சிறப்புடன் திகழ்கிறது. இன்றைய சமுதாய உணர்வுகளையும், நிகழ்ச்சிகளையும் தோலுரித்துக் காட்டுவது நாவலாகும். "மனிதன் தன்னந்தனியாக வாழ்பவன் அல்லன். கூடி வாழும் இயல்பு உடையவன். ஆம், "இலக்கியத்தின் அடிப்படையே சமுதாய உணர்வுதான். மேலும் தமிழ்ச் சமுதாயத்தையும், தமிழ் மக்களிடையே காணும் மாற்றங்களையும் அறிவிக்கும் கலைச்சங்குகள் எனப்படுவது தமிழ் சமூக நாவல்கள் ஆகும். "இன்றைய சமூக வளர்ச்சியில் மக்களிடையே தோன்றுகின்ற எந்த பிரச்சனைகளையும் நாவல் என்ற கலைச்சாசனத்தின் வாயிலாகத் தான் விவாதிக்க முடியும். மேலும் "குறிப்பிட்ட பகுதியினரின் வாழ்க்கை பின்னணியாக அமையும் போது பாத்திரப் படைப்பும் சமுதாயப் பின்னணியும் சிறப்பாக இணைந்திருக்க வேண்டும் என்றார். தா. ஏ. ஞானமூர்த்தி. "நாவல் என்பது மறுமலர்ச்சி யுகம் பெற்றெடுத்த கலைவடிவம் இன்றைய படைப்பாளர்கள் தங்கள் எண்ணங்களையும், கற்பனைகளையும் வெளியிட அவர்களுக்கு கிடைத்திருக்கும் ஓர் ஒப்பற்ற சாதனம் இதுவே என்பர்" நாவல் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டிருப்பதாலும் கலைக்குரிய அடிப்படைப் பண்புகளை கொள்ளாமல் இல்லை, நாவல் பரந்த எல்லை உடையதாகவும், பன்முகப் போக்குடையதாகவும், வளர்ந்துள்ளது. உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் நடப்பியல் நாவல்களே சமூகத்தை சரியாக சித்தரிக்கும் வலிமையோடு திகழ்கின்றன என்று கூறுகின்றன. மேலும் சு. தமிழ்ச்செல்வியின் அளம் நாவல் சமூகத்தை மையமாக வைத்து எதார்த்த நாவலாகும். பெண்களின் மன உளைச்சலை ஆழ்ந்த மனதில் உள்ள இன்ப துன்பங்களை ஈரம் காயாத நடையில் தம் நாவலில் கூறுவதையே கொள்கையாகக் கொண்டு அளம் நாவலைப் படைத்துள்ளார். கணவனால் கைவிடப்பட்டு வாழ்வின் கடைசி வரை துன்பங்களை அனுபவிக்கின்ற பெண்களின் மனக்குமறலே இவரது படைப்பு.

**அறிமுகம்**

அளம் நாவலில் சுந்தரம்பாள், வடிவம்பாள், ராசம்பாள், அஞ்சம்மாள் ஆகிய பெண்களின் அவலத்தையும் முன் நிறுத்தி, சுந்தரம்பாள், வடிவம்பாள், ராசம்பாள் மூவருமே கணவனால் கைவிடப்பட்டு, தாங்கள் சந்திக்கும் அவலங்களை யதார்த்த நடையில் அமைத்துள்ளார்.

கணவனால் கைவிடப்பட்ட நிலையில் மூன்று பெண் குழந்தைகளையும் வளர்த்து, ஆளாக்கி திருமணம் முடித்துக் கொடுத்த பிறகும் அவர்களுக்காகவே வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தாங்கிக் கொண்டு வாழ்க்கைப் போராட்டம் நடத்தும் சுந்தரம்பாள் தனது வாழ்க்கைப் பயணத்தில் சந்திக்கின்ற ஒவ்வொரு பிரச்சனைகளும் அவலம் நிறைந்ததாகவே விளங்குகின்றது என்பதனை சராசரி கணவன்மார்களைப் போலில்லாமல் தனது கணவன் பொறுப்பற்று கிடந்ததால் குடும்பத்தைச் சுமக்க வேண்டிய நிலை பெண்களைச் சென்றடைவதோடு ஆண் துணையில்லாமல் அவள் அடைகின்ற துன்பத்தை அளம் நாவலின் ஊடாக ஆராய்கின்றதெனலாம்.

**சுந்தரம்பாள் குடும்பத்து அவலம்**

கணவனும் கைவிட்டு, விவசாயமும் பாதித்து விட்ட நிலையில் வறுமை சுந்தரம்பாளின் குடும்பத்தை ஆட்கொள்ள வயிற்றுப் பிழைப்புக்காக காடுகளிலும் வயல் வெளிகளிலும் கிடைக்கின்ற அமலைக் கொடிகளையும், தொம்மாட்டிக் காய்களையும், கிழங்குகளையும் பறித்து உண்டும் விற்றும் வயிற்றுப்பிழைப்பை ஓட்டினாள். அமலைச் செடிகளை கூடையில் அரித்து வைத்துக் கொண்டு சுந்தரம்பாளும் வடிவம்பாளும் செல்ல சுந்தரம்பாள்

"ஒரு கூட கொடிருக்கு எப்படியும் ரெண்டுபடி தேரும்"

"யாரும் பார்த்தா மாட்டுக்குத்தான் பில்லறுத்துக்கிட்டு போறேன்னு நெனப்பாவோ" (அளம் ப. 42)

என்று தன் மனதிட்குள்ளே எண்ணுகிறாள். வீட்டிற்குக் சென்று அச்செடிகளில் உள்ள விதைகளைக் கலைந்து பாதியை வறுத்தும் மீதியை அரைத்தும் மாவாக்கி அதை தன் பிள்ளைகளுக்கு போட்டுக்கொடுத்து சட்டியோடு மீதிருந்ததை தனக்கு முன்னால் எடுத்து வைத்து வழித்துத் தின்றாள். அப்பொழுது

"கடவுளே எத்துன நாளக்கி இந்த நெலம்" (அளம் ப 54)

என்று தனது குடும்ப நிலையை எண்ணி வருந்துகிறாள். அவள் நினைவுகளில் தன் கணவன் சுப்பையன் வந்தான். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டேயிருந்தது.

காட்டில் கிடந்த தொம்மாட்டிக் காய்களை அரித்து வத்தல் போட்டு மொத்தமாய் சாக்கில் போட்டு கட்டி தன் கடைசி மகள் அஞ்சம்மாளையும் அழைத்துக் கொண்டு திருத்துறைப் பூண்டிக்குச் சென்று வத்தல்களை விற்று விட்டு வருகிறாள்.

காட்டில் கிடக்கும் தொம்மட்டிக்காய்களை அரித்துக் கொண்டிருக்கும் போது தன் குடும்பத்து நிலையை வடிவாம்பாள் எண்ணி வருந்தி

இப்படி எங்கள் சந்தீல வுட்டுட்டுப் பெயிட்டியேப்பா, அம்மா படுறபாடு உனக்கு தெரியிமாப்பா, சாவக்கொட முடியாம நாங்க தத்தளிக்கிறமே, எங்களப் பாக்கனுமுன்னு ஒனக்கு நினைப்பே வல்லயாப்பா? ஒனக்கும் எங்களப் புடிக்கலையாப்பா? நீ எங்கப்பா இருக்கிற? ஒரே ஒரு நட வந்துட்டுப் போப்பா (அளம் ப.63) என்று எங்கேயோயிருக்கும் அப்பாவிடம் நினைவுகளால் பேசுகிறாள்.

குடும்பம் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு கிடக்கிறது. அன்றாடம் அருந்தும் தேநீர் கூட எட்ட முடியாத கனவாகவேயிருந்தது" காசி பணம் இருக்குறவ்வொதாங் காப்பி தண்ணி டீத் தண்ணிக்கெல்லாம் ஆசப்படணும் நம்மளுக்கு தெனமும் தெளுவுத்தண்ணி கெடச்சாப் போறாது? வூடு வூடாப்போயி இதுக்கெல்லாம் மூஞ்சி வீங்கிப் போயி வாரியா நீ" (அளம் ப. 72) என்று அஞ்சம்மாளைச் சுந்தரம்பாள் திட்டுதன் வாயிலாக அக்குடும்பத்தில் ஏற்பட்ட அவல நிலைகளையும் அறிய முடிகிறது.

வடிவம்பாளுக்கு மணமுடித்து வைக்க முடியாத வேதனையில் சுந்தரம்பாள் "ஒங்கப்பாரு இப்புடி பண்ணிப்புட்டு பெயிட்டாவொளே, பொம்புளயா இருந்துக்கிட்டு என்னால ஒழைக்க முடிஞ்சிச்சி, செருமப்படமுடிஞ்சிச்சி, ஒங்கள வளத்து ஆளாக்க முடிஞ்சிச்சி, ஊருசனம் பாத்து ஒரு சொல்ல சொல் லுறத்துக்குள்ள ஒன்ன கரயேத்த முடியலையே" (அளம் ப. 60) என்று வடிவம்பாளிடம் கூறியழுவதன் வாயிலாக அக்குடும்பத்தின் அவலநிலை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

**வடிவம்பாளின் திருமணபந்தம்:**

கடல் கொந்தளிப்பினால் விவசாயம் அற்றுப்போய் விட்ட நிலையில் கோவில் தாழ்வு மக்களனைவரும் உப்பளத்து வேலைக்குச் சென்றனர்.

'உப்பு வெளயிற வருசத்துல நாடு செழிக்காது,

நாடு செழிக்கிற வருசம் உப்பு வெளயாது' (அளம் ப. 183)

என்று சொல்வதைப் போல் உப்பு உற்பத்தி அதிகமாக, சுந்தரம்பாளும் தன்னுடைய மூன்று மகள்களையும் அழைத்துக் கொண்டு அளத்து வேலைக்குப் போய் வந்தாள்.

ஏவிளம்பி வருசம் ஐப்பசியோடு இருபத்து மூன்று முடிந்து விட்ட நிலையில்,

‘வயசுக்கி வந்த புள்ளைவொள

காலாகாலத்துல கட்டிக் குடுக்காம அளத்துக்கு

போச்சொல்லி திங்கிறமே’ (அளம் ப.186)

என்ற கவலை சுந்தராம்பாளை அரித்துதின்று கொண்டிருந்தது பார்ப்பவர்களிடமெல்லாம் சொல்லி அழுதாள் சுந்தரம்பாள் “எப்புடிப்பட்ட சம்மந்தமாயிருந்தாலும் கொண்டாங்க கட்டிக்குடுத்துறணும் இதுக்கு மேல வச்சிக்கப்புடாது” என்று தெரிந்தவர்களிடமெல்லாம் சொல்லி வைத்தால் கயலம் பேட்டையைச் சேர்ந்த தில்லைக்கண்ணு என்பவர் மூலமாக ஐம்பது வயதுடைய பொன்னையனுக்கும், வடிவம்பாளுக்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது.

ஒருநாள் தனியாய் எதையோ நினைத்தபடி மனைக்கட்டு இறக்கத்தில் நீண்ட நேரமாய் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த ராசம்பாள் என்னக்கா யோசனயாருக்குற?’ என கேட்டவளிடம்,

‘எனக்கு என்னமோமாதிரியிருக்கு நடுத்தங்கச்சி

யாண்டா பொண்ணாப் பொறந்து தொலஞ்சோமுன்னு

நெனக்கிறேன்’

அவரு நம்ம பெரியப்பாவுக்கு மூப்பாருப்பாரு

பொலருக்கு நம்மளுக்கு தாத்தாமேரி (அளம் ப. 191)

என்று தன் திருமணத்தைப்பற்றியும் தனக்கு நிச்சயம் செய்யப்பட்டவரின் வயதைப பற்றியும் கூறியழுகின்றாள். திருமணம் முடிந்து மூன்றாவது மாதத்தில் பொன்னையன் இறந்து போக ஆதனூரைச் சேர்ந்த வலிப்பு நோயுள்ள முத்துச்சாமியுடன் அவரின் சம்மதம் இல்லாமலே, இரண்டாவதாக திருமணம் நடத்தி முடிக்கப்பட்டது. அளத்தையும் அம்மாவையும் தங்கையையும் விட்விட்டு விசும்பலுடன் முத்துசாமி பொண்டாட்டியாய் வாழப்போனவள் அவனையும் இழந்து இரண்டாவதாய் கட்டிக் கொடுத்த இடத்திலும் கணவனோடு இருந்து வாழக் கொடுப்பினையற்றவளாய் கோவில் தாழ்விற்கு திரும்பி விடுகிறாள்.

**ராசாம்பாளின் திருமண பந்தம்**

வடிவம்பாளுக்கும் பொன்னையனுக்கும் திருமணம் நடந்த அன்றே ராசாம்பாளுக்கும் அகஸ்தியம் பள்ளி வேதப்பனுக்கு திருமணம் நடைபெற்று அவள் மூன்று குழந்தைகளுக்கும் தாயாகிறாள். இவளைத் தவிர வேறு ஒரு பெண்ணுடனும் தொடர்பு வைத்திருப்பதை அறிந்து அவனிடமிருந்து பிரிந்து தாய் வீட்டையடைந்து தன் தாயிடம்

“அவ்வொளுக்கும் எனக்கும் இனிமே ஒறவேயில்ல, நான் தாலிய கயட்டி பெரிய கோவில் உண்டியல்ல போட்டுட்டு வந்துட்டேன்” என்றாள்.

“என்ன வேல செஞ்சுப்புட்டு வந்து நிற்கிற?

ஒரு பொம்புள செய்யிற வேலயா இது? என்ன தாங் சண்ட வம்பாருந்தாலும் இப்புடியா செய்யிற? பொம்புளயா நீ? என்ற வாறே இரண்டு கையாலும் ஆவேசம் வந்தவளாய் ராசாம்பாளின் முதுகில் ஓங்கி ஓங்கி அடித்தாள்.

“படுபாவி கெடச்ச வாழ்க்கய நாசம்பண்ணிப்புட்டு வந்து நிக்கிறயே” என்று இரைந்தாள்.

“ஒங்கையாலயே என்ன அடிச்சுக் கொல்லும்மா, இந்த பாளும் உசுர வச்சிக்கிட்டு நாயாந்தாங் இருக்கனும்? என்று சொல்லி அழுதாள் ராசாம்பாள்.

நல்லா வாழ்ந்துக்கிட்டுருந்த பொண்ணு, இப்புடி தாலிய கயட்டி உண்டியல்ல போட்டுட்டு வந்துட்டாளே” என்ற கோவத்தால் தான் அடித்தாளே தவிர, அடித்துவிட்ட பிறகு சுந்தராம்பாளும் உட்கார்ந்து அழுதாள்.

“அப்புடி என்னதாஞ் செஞ்சிச்சி அந்தத் தம்பி” என்று கேட்டவளிடம்

“காப்புவுட்ட மூணாம்நாளு வூட்டுட்டுப் போனவ்வொம்மா நேத்தக்கி வரய்க்கிம் வூட்டுக்கு வல்ல”

குட்டச்சிக்காட்டுல கட்டுமனவாங்கிப் போடடெல்ல, அதுல எனக்குத் தெரியாமலேயே எப்பவோ வீடு கட்டி “எவளோ ஒரு செருக்கிய கல்யாணம் பண்ணிக்கிட்டு குடும்பம் பண்ணிக்கிட்டுருப்பத “யாங் கண்ணாலயே பாத்தம்மா, ரெண்டியரும் சோடி போட்டுக்கிட்டு போனத்த” என்று சொல்லி மறுபடியும் அழுதாள், தாயிடம்.

“அவனுக்கு நா என்னம்மா கொறவச்சங்

தாலி கட்டிப் போனத்துலேருந்து யாங் குடும்பம்

யாங் குடும்பமுன்னு வேல வெட்டிய உளுந்து உளுந்து செஞ்சன், அந்தக் குடும்பத்துக்காவ நா எவ்வளவு ஒழச்சங், க்'டப்பட்டங் கொஞ்சங் கொட நன்றியில்லாம இப்படி பண்ணிட்டானே அவன் வெளங்குவானா? இவனுக்கு கல்லு கருமாதியெடுக்க குட்டச்சிக்காட்டுல கட்டு மன வாங்கிக் கொடுத்தேனே அவன் நல்லாருப்பானா, புதுப்பொண்டாட்டியோட நெலச்சி வாழுவானா? (அளம் ப. 256)

நான் என்ன பண்ணுனங்? அவனுக்கே என்னப் புடிக்கலன்னுட்டு போனத்துக்குப் பெறவு நா எப்புடிம்மா இளுத்தாந்து வச்சி வாளுற? என்று தனது ஆத்திரத்தை அவலத்தை குமறலாக வெளிப் படுத்துகிறாள். சுந்தரம்பாளின் இரண்டாவது பெண்ணும் வாழாவெட்டியாக தாய் வீட்டையடைகிற செயல் அவலத்தின் உச்சக்கட்டமாக விளங்குகிறது.

**அஞ்சம்மாளின் காதல் பந்தம்**

அங்சம்மாளை பூச்சி விரும்பினான், அவளும் அவனை விரும்பினாள், இருந்தாலும் தன் குடும்பச் சூழலால் அதை அவனிடம் வெளிப்படுத்தவேயில்லை. அஞ்சம்மாளை திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு தன் தாயிடம் அவளைப் பற்றி பேச தாயோ

“வாபுணுமுன்னு ஆசப்படுறவ்வொ யாரும்

ஆந்த வூட்டுல சம்மந்தம் வச்சிக்கி – மாட்டாவொ”

என்றாள் யாம்மா? என கேட்டவனிடம்

“அந்த பொம்புளையோட புருசன் கப்பலுக்குப் போறனுட்டுப் போனவந்தாங் உசுரோட இருக்குறானா இல்ல செத்தானான்னே ஒன்னுந்தெரியல, மொத்திய கட்டிக் குடுத்தாவொ ஒரு டெத்துக்கு ரெண்டடெடமா, ரெண்டெடத்துலயுமே மூணே முக்கா நாளி இருந்து வாளாம ஆம்புடையானு வொள தூக்கிப்போட்டு முளுங்கிப்புட்டு மூளியா வந்துட்டு அதுதான் அப்புடின்னாக்க ஒரு பொண்ணக் கட்டிக் குடத்தாவொளே அதாவது புருசங் கொடயிருந்து ஒளுங்கா வாழ்ந்திச்சா, அதுவும் வாளாவெட்டியா வந்து ஒக்காந்துருக்கு, அந்த குடும்பத்து பொண்ணுவொ இருந்து வாளாதுவொ, அதக் கட்டுன முன்னாக்க ஒன்னோட வாழ்க்கயும் வீணாத்தாம் போவும், கண்ணு தெரிஞ்சிம் நம்ம போயி பாளுங் கெனத்துக்குள்ள வுளக் கொடாது. நீ குடியா குடுத்தனமா நல்லா வாழனும் ஒனக்கு உள்ளுரு சம்பந்தமே வேண்டாம் அந்தப் பொண்ண கட்டுற ஆசய வுட்டுருப்பா”(அளம் ப. 266) என்றுரைக்கிறாள். குடும்பத்தில் ஒரு பெண் அடைகிற பாதிப்பால் எந்தளவிற்குப் அடுத்தடுத்த பெண்களும் அடைவார்கள் என்ற அவல நிலையும் விளக்கப்பட்டுள்ளது.

**நிறைவுரை**

கணவனால் கைவிடப்பட்ட பிறகும், சுந்தரம்பாளிடம் உருவாகும் இயல்பூக்கங்கள் எல்லா விதமான தடைகளையும் தகர்த்து மூன்று பெண்பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்க நினைத்த அவளது குறிக்கோளுடன் கூடிய இலட்சியத்தை உணரும் போது சமூகத்தில் பெண்களால் தனித்து வாழ முடியும் என்பதையும், உப்பளங்களின் தன்மையும் உப்பளத்தில் வேலை செய்வோரின் துயரநிலையும், குடும்ப வறுமை காரணமாக பெண் வயதுக்கு ஒத்துவராத திருமண முறையும், திருமண பந்தங்களின் அவலநிலையினையும் மூன்று குழந்தைகளுக்கு தந்தையான பின்பும் வேறொருத்தியை திருமணம் செய்து சுயநலத்தோடு

வாழும் இழி குணத்தை உடைய கணவனின் செயலை தாயிடம் சொல்லி அழும் பெண்ணின் அவலமும், தான் விரும்பியவனிடம் தன் காதலை வெளிப்படுத்தாமல் தாயை எதிர்த்து நம்ம ரெண்டியரும் ஊரவுட்டு எங்குட்டாவுது பெயிடுவமா? என கேட்டவனிடம் சொல்லாம கொள்ளாம ஓடிப்போற பொண்ணு நான் இல்ல, எங்கம்மா என்ன அப்புடி வளக்கல என தன் காதலை குழிதோண்டி புதைத்து தன் அப்பா இல்லாமல் வளர்த்த தாயின் துயரத்தை நினைத்து வேதனைப்படும் அவலநிலையும், ஆசிரியர் பெண் என்பதால் இந்நாவலில் பெண்களை முதன்மைப்படுத்தியதோடு அவர்களது வாழ்க்கைத் துயரங்களையும் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் பன்னெடுங்காலமாக பேசப்பட்டு வரும் பெண் தொடர்பான திருமணச்சிக்கல் இன்னும் தீர்க்கப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது என்பதனையும் இலக்கியத் துறையில் நல்ல மாற்றம் உருவாக இத்தகைய நாவல் புதுப்பாதையைக் காட்டி வழி நடத்திச் செல்லக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்ற எண்ணம் தெளிவாகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. இராமலிங்கம்.மா, 20ம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம் மூன்றாம் பதிப்பு, 1985.
2. கைலாசபதி.க. தமிழ் நாவல் இலக்கியம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், நான்காம் பதிப்பு சென்னை – 17, 1987.
3. தண்டாயுதம்.ரா, நாவல் வளம், தமிழ் புத்தகாலயம், சென்னை 1978
4. மறைமலை, இலக்கியமும் சமூகவியலும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு 1991.
5. வீராச்சாமி தா. வே, தமிழில் நாவல் வகைகள் தமிழ்ப்பதிப்பகம், சென்னை 1997.